*2021 பிப்ரவரி 25]*

**28—**

## வீட்டுமனைப் பட்டா

***49181—திரு. சிவ.வீ. மெய்யநாதன்:**

*மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆலங்குடி தொகுதி, திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், பாத்தம்பட்டி ஊராட்சி, அங்காடி தெருவில் வசிப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டிலே 'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கே இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்று தன் வாழ்நாள் எல்லாம், இந்தத் தாய் தமிழ்நாட்டிற்காக உழைத்திட்டவர் நம்முடைய இதய தெய்வம் தமிழர் குலசாமி அம்மா அவர்கள். 'அமைதி, வளம், வளர்ச்சி' என்கின்ற தாரக மந்திரத்திற்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்திட்ட தியாகத்தின் திருவுருவம், 'மக்களால் நான்; மக்களுக்காக நான்' என்ற தாரக மந்திரத்திற்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவருடைய 73—வது பிறந்த தின விழாவினை, ஏழையெளியோர் ஏற்றம் பெறுகின்ற வகையிலே நாடெங்கும் கடைபிடித்து வருகின்ற இந்தப் பொன்னான வரலாற்றிலே, 'கடவுள் என்னும் முதலாளி, கண்டெடுத்த தொழிலாளி, விவசாயி' என்று சொல்வதைப்போல, நாம் கடவுளாக வணங்குகிற நம் தெய்வத் தலைவி அம்மா அவர்கள் கண்டெடுத்த விவசாயி மாண்புமிகு முதல்வர் பாசமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தன்னை ஆளாக்கி, அழகு பார்த்து, இந்தப் பொது வாழ்விலே ஈடுபடுத்திய புரட்சித் தலைவருக்கு நூற்றாண்டு விழாவினை தனது தலைமையிலே, தமிழகம் முழுவதும், 32 வருவாய் மாவட்டங்களிலே—புரட்சித் தலைவருக்குப் புகழ் பாடுகிற கூட்டமாக அல்லாமல், ஏழையெளியோருடைய வாழ்விலே ஒளியேற்றி வைக்கின்றவகையில்—நலத் திட்ட உதவிகள் வழங்குகிற*

விழாவாக நடத்திக் காட்டிய பெருமைக்குச் சொந்தக்காரர், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். தனது தலைமையிலே புரட்சித் தலைவருடைய நூற்றாண்டு விழாவை நடத்திக்காட்டி, இன்றைக்கு தமிழக அரசியல் வரலாற்றிலே எந்தத் தலைவருக்கும் இல்லாத பெருமையைப் பெற்ற ஒரு சாமானிய முதல்வராக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் விளங்குகிறார்கள்.

புரட்சித் தலைவரின் வழிவந்த புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களது புகழைப் பரப்புகின்ற வகையிலே, அவரது திருவுருவச் சிலையினை எட்டுத் திக்கும் அமைத்திட, அதற்கான கோப்புகளிலே உடனடியாக கையொப்பமிட்டு, தமிழகம் முழுவதும் அம்மாவினுடைய திருவுருவச் சிலையை அமைத்து, ஆங்காங்கே ஏழையெளியோர்கள் வழிபடுவதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அதேபோன்று, ஃபீனிக்ஸ் பறவை போன்ற வடிவமைப்பிலான அம்மா அவர்களது நினைவிடம் உலகத்தில் வேறு எந்தத் தலைவருக்கும் அமையவில்லை. மக்களுக்காக வாழ்ந்து, இந்த மக்களுக்காகவே உழைத்திட்ட புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நினைவிடம் அமைத்ததோடு, அறிவுசார் பூங்காவையும் அமைத்து, வரலாற்றிலே இடம் பிடித்திருக்கிறார் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு குடிமராமத்துத் திட்டம் தந்தது யார்? சட்டம்—ஒழுங்கைக் காப்பாற்றுவது யார்? பயிர்க் கடனைத் தள்ளுபடி செய்தது யார்? மாணவர் நலனைக் காப்பாற்றியது யார்? மக்களுக்கான பொங்கல் பரிசுத் தொகுப்பாக 2,500 ரூபாய் தந்தது யார்? இப்படி "யார், யார்" என்று கேட்டால், மக்கள் மனதிலே கிடைக்கின்ற ஒரே விடை, நம்முடைய மாண்புமிகு எடப்பாடி"யார்" (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய ஒரு வரலாற்றுச் சிறப்பைப் படைத்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2021 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கிற பொதுத் தேர்தலிலே, களத்திலே நிற்கிற முதல்வர் வேட்பாளர்களிலே, எளிமையானவராக, தூய்மையானவராக, உழைப்பவராக, தன்னலம் பாராதவராக, தான் ஏற்றுக்கொண்ட தலைமைக்கு விசுவாசமாக இன்றைக்கும் விளங்குகிறார். தன்னுடைய தொண்டர்களை தாய்போல் அரவணைத்து, நம்முடைய தாய்த் தமிழகத்தை இந்தியத் திருநாட்டிலே முதன்மை மாநிலமாக வழி நடத்தக்கூடிய ஆற்றல் பெற்றிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர்

2021 பிப்ரவரி 25]

அவர்கள், இன்றைக்குக் களத்திலே நிற்பவர்களில் முதன்மையான இடத்தைப் பிடித்திருக்கிறார்.

முற்பகல் 10–55

அப்படிப்பட்ட மாண்புமிகு முதலமைச்சருடைய ஆட்சி காலத்திலே, இன்றைக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. நாம் பிறந்து வாழ்கின்ற மண்ணில், தனக்கு ஒரு பிடி மண்கூட சொந்தமாக இல்லையே என்று ஏங்குபவர்களுடைய ஏக்கத்தைப் போக்குகின்ற வகையில், வாட்டத்தைப் போக்குகின்ற வகையில், தனது சீரிய திட்டங்களினால், அரசு நிலங்களில் குடியிருப்பவர்களுக்கும், ஆட்சேபகரமற்ற புறம்போக்கு நிலங்களில் இருப்பவர்களுக்கும், வீட்டுமனைப் பட்டாக்களை உருவாக்கி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்தப் பகுதியிலே 13 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு, கிராமக் கணக்குகளிலும் அந்த விவரம் மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா.

**திரு. வி.வி. இராஜன் செல்லப்பா:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாவினுடைய அரசை மிகச் சிறப்பாக நடத்தி, மக்களின் நற்பெயரைப் பெற்றிருக்கிற, போற்றுதலுக்குரிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். இனிய அண்ணன், அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களது தலைமையிலான அரசில், போற்றுதலுக்குரிய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், நிரந்தரக் குடியிருப்புகளுக்கு வருவாய்த் துறை மூலமாக இலட்சக்கணக்கான பட்டாக்களை வழங்கி, சாதனை மிக்க அரசிற்கு சிறப்பு சேர்த்திருக்கிறார். நீராதாரத்திற்குப் பாதிப்பு இல்லாமல் உள்ள கால்வாய்ப் பகுதிகளில், நீர்ப் போக்குவரத்துக்கு தடையில்லாமல் உள்ள பகுதிகளில் 50 ஆண்டுகளுக்கும் மேலாகக் குடியிருந்து வரும் மக்களுக்கு வருவாய்ப் பதிவேட்டில் கண்மாய் புறம்போக்கு,

கால்வாய் புறம்போக்கு என்று இருக்கிற ஒரே காரணத்தினால், பட்டா வழங்குவதை நீதிமன்ற ஆணைகளை காரணமாகக் காட்டி வருவாய்த் துறை தவிர்த்து வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மக்கள் மன நிலையை அறிந்து செயலாற்றுகிற சக்தி படைத்தவர். அவரது அரசில் சிறப்பாகச் செயல்படுகிற வருவாய்த் துறை, அனைத்திற்கும் ஒரு விதிவிலக்கு உண்டு என்பதைக் கருத்தில்கொண்டு, எந்தவித பாதிப்பும் இல்லாமல், நீராதாரத்திற்கு, கால்வாய்களுக்கு, கண்மாய்களுக்கு பாதிப்பு இல்லாமல், அந்தப் பகுதியில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக, ஏறக்குறைய 100 ஆண்டுகாலமாகக் குடியிருந்து வருகிற ஏழை மக்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நம்முடைய மக்கள் அரசு, நம்முடைய அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களது அரசு அதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அந்தத் துறைக்குப் பொறுப்பேற்று சாதனை படைத்துக் கொண்டிருக்கிற மதிப்பிற்குரிய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், குழுக்களை அமைத்து ஆய்வு செய்து, அதன்மூலம் அதற்கான விதிவிலக்களித்து பட்டா வழங்க ஏற்பாடு செய்வாரா, அதற்கான உதவிகளை வழங்குவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அண்ணன் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள், மக்கள் நலன் சார்ந்திருக்கிற ஒரு முக்கியமான கோரிக்கையை இங்கே அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர், அண்ணன் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்களுக்கும் விதிமுறைகள் நன்றாகத் தெரியும். தெரிந்துதான் அதனைத் தளர்த்தி, மக்களுக்குப் பயனுள்ள வகையில் அறிவிப்பு வெளியிட முடியுமா என்று கேட்டிருக்கிறார். நீர்நிலைகளைப் பாதுகாக்க வேண்டுமென்பது ஒவ்வொருவருடைய கடமையாக இருக்கிறது. அதற்கு நீதிமன்றத்தினுடைய ஆணை நமக்கு வழிகாட்டுகின்ற வகையில் உள்ளது. இன்றைக்கு அந்த ஆணையில் அவர்கள் என்ன குறிப்பிட்டிருக்கின்றார்கள் என்று சொன்னால், தூர்ந்து போன நீர்நிலைகளைக்கூட, அழிந்துபோன நீர்நிலைகளைக்கூட,

*2021 பிப்ரவரி 25]*

நாம் மீண்டும் உருவாக்கி அதனைப் பாதுகாத்து, வருகிற தலைமுறைகளுக்குப் பரிசாகக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் நீர் மேலாண்மையில் நாம் சிறந்தவர்களாக விளங்க முடியும்; வருகிற தலைமுறைகளைக் காப்பாற்ற முடியும் என்கின்ற விளக்கங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அந்த வகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கை குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, குழு அமைத்து ஆய்வு செய்யப்படும். இதுபோன்ற ஆட்சேபகரமான புறம்போக்குகள், குறிப்பாக நீர்நிலைப் புறம்போக்குகளில் இருப்பவர்களுக்கு, அவர்கள் குடியிருக்கின்ற பகுதிகளுக்குப் பதிலாக, மாற்று இடம் வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவர்கள் விருப்பப்படுகிற மாற்று இடங்கள் அடையாளம் காணப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலான குழுக்கள்மூலம், அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு ஏற்கெனவே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், நீர்நிலைப் பகுதிகளில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்குவதற்கும், வீட்டுமனைகளை உருவாக்குவதற்கும் தற்போது விதிமுறைகளில் வழிவகை இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் இது நன்கு தெரியும். இருப்பினும், அதைத் தளர்த்தி, பட்டா வழங்க ஏதேனும் வழிவகை இருக்கிறதா என்று கேட்கிறார். அவர் முன்வைத்திருக்கிற அந்தக் கோரிக்கை மக்கள் நலன் சார்ந்த கோரிக்கை. அவர்களுக்கு மாற்று இடம் வழங்குகிற தற்போதைய அந்தத் திட்டத்திற்குப் பதிலாக, அதே இடத்தில் அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு சட்ட திட்டத்தில் ஏதேனும் வாய்ப்பு இருக்கிறதா என்பது குறித்து ஆராய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு மீண்டும் எடுத்துச் செல்லப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சாமானிய மக்கள்மீது எந்த அளவிற்கு அக்கறை வைத்திருக்கிறார்கள் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு; ஒரே அரசாணையில் 50,000–க்கும் மேற்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன; அதை வழங்கிய அரசு, அம்மாவினுடைய அரசு ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் இன்றைக்கு 25,28,000–க்கும் மேற்பட்டவர்களுக்கு அம்மாவினுடைய அரசு பட்டா வழங்கியிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள் நன்கு அறிவார்கள்.

ஆகவே, அதே இடங்களில் பட்டா வழங்குவதற்கு தற்போது விதிமுறைகளில் இடமில்லை. எனவே, இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு மூத்த உறுப்பினர் அண்ணன் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள் கூறிய வழிகாட்டுதலுக்கான ஆலோசனையைச் செயல்முறைப்படுத்துவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றனவா என்பது குறித்து ஆய்வுகள் மேற்கொள்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பரிசீலனைக்கு எடுத்துச் செல்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ப. சரவணன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**29**—

**வாசனை திரவியத் தொழிற்சாலை**

***51519—டாக்டர் ப. சரவணன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதி, வளையங்குளத்தில் மல்லிகைப் பூ வாசனை திரவியத் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவினைப் போற்றி வணங்குகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புகழுக்குப்